JUDICIAL MAGISTRATE COURT, AMBATTUR
DEPOSITION OF WITNESS

CC.No. 129/2022 Date:29.05.2026 P.W. 4 / LW

| | |
|---|---|
| பெயர் | திரு. த. ஜெயமணி, |
| தந்தை பெயர் க/பெ | |
| முகவரி | |
| கிராமம் | |
| மாவட்டம் | |
| ஜாதி | |
| தொழில் | சார்பு ஆய்வாளர் (ஓய்வு) |
| மதம் | |
| வயது | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 29th day of May 2026.

1 மற்றும் 2 வமு எதிரிகள் தரப்பில் சட்டப்பிரிவுகள் 355 BNSS பிரிவில் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் கடைசியாக ஐ.சி.எப் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து கடந்த 31.07.2025 அன்று பணி ஓய்வு பெற்றுவிட்டேன். இதற்கு முன்பு வி3 ஜெ. ஜெ நகர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த போது கடந்த 20.06.2021 அன்று காலை 10.00 மணியளவில் இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் கிருஷ்டினா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அன்றைய தினமே காலை 10.00 மணிக்கு நிலைய குற்ற எண்.622/2021, சட்டப்பிரிவுகள் 341, 392, 506(1) இதச வின் படி **அ.தசா.ஆ. 3** ஆன முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்தேன். பின்பு இவ்வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே காலை 11.00 மணிக்கு வழக்கின் சம்பவ இடமான அண்ணா நகர் வேலாமால் பள்ளி அருகே சென்று சாட்சிகள் திரு. சக்திவேல், திரு. மணிமாறம் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு விசாரணை செய்து **அ.த.சா.ஆ. 4** ஆன மாதிரி வரைப்படம் வரைந்து **அ.த.சா.ஆ 5** ஆன பார்வை மகஜர் தயார் செய்தேன். பின்பு மேற்கண்ட மகஜர் சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு சாட்சிகள் கிருஷ்டினா, வெண்ணிலா, சுசிலா ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு இவ்வழக்கில் நிகழ்நிலை புகார்தாரரிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்டு விழுப்புரம் கோடியக்கரையில் உள்ள எதிர் கவிதாஸ் என்வர் வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த TN 85 C 9128 என்ற பதிவெண் கொண்ட எமாக இசட் ரே என்ற இருசக்கர வாகனத்தை சாட்சிகள் திரு. கார்த்திக், திரு. வெங்கட் ஆகியோர் முன்னிலையில் **அ.த.சா.ஆ. 6** ஆன கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். பின்பு மேற்கண்ட சாட்சிகளை

தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தோன். பின்பு மேற்கண்ட வாகம் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டது. பின்பு வழக்கை மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். மேற்கண்ட காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

## எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

புகாரின் வலது மேல் புறத்தில் கையொப்பம் செய்யப்பட்ட இடத்தில் தேதி குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். புகாரில் எதிரிகள் பயன்படுத்திய வாகனத்தின் மாடல் மற்றும் பதிவு எண் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். புகார் கொடுத்த அன்றைய தினம் 1 முதல் 5 வரையுள்ள பட்டியல் சாட்சிகளின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். அ.சா. 1 கிருஷ்டினாவின் வாக்குமூலம் அன்றைய தினமே என்னால் பெறப்பட்டு தேதி மற்றும் கையொப்பம் இட்டு ரப்பர் ஸ்டேம்ப் உதவி ஆய்வாளரால் சீல் செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். மேற்கண்ட எதிரிகள் பயன்படுத்திய வாகன மாடல் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரிதான். புகாரிலும், வாக்குமூலத்திலும், 1 முதல் 3 வரை உள்ள பட்டியல் சாட்சிகள் சுற்று காவலர் போலிசார் சம்பவம் நடந்த உடனே வந்ததாக குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான். அது போல் சுற்று காவல் போலிசார் அறிவுறுத்தலின் பேரில் மறுநாள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாக என் விசாரணையில் கூறவில்லை என்று சொன்னால் சரிதான். பார்வை மகஜரில் வேலாமால் பள்ளியின் கேட்ட அருகே தான் சம்பவம் நடைப்பெற்றதாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அங்கிருக்கும் சி.சி.டி.வி பதிவுகளை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். பட்டியல் சாட்சிகள் 1 முதல் 3 வரை உள்ளவர்கள் சம்பவயிடத்தை அடையாளம் காட்டியதாக வாக்குமூலத்தில் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால சரிதான். வாகனத்தை பறிக்கொடுத்த சுசிலா என்வரிடமிருந்து எந்த புகாரும் பெறப்படவில்லை என்று சொன்னால் சரிதான். பட்டியல் சாட்சிகள் 1 முதல் 3 வரை உள்ளவர்களின் வாக்குமூலங்கள் வெண்ணிலாவின் சகோதரிக்கு சொந்தமானது பறிபோன இருசக்கர வாகனம் என்று தான் வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் நீதிமன்றத்திலிருந்து மனு செய்து வெண்ணிலாவே வாகனத்தை உரிமையாளர் என்ற முறையில் பெற்று சென்றுள்ளார் என்று சொன்னால் சரிதான். 19.06.2021 அன்று கொரானா தொற்று அதிகமாக இருந்த காலம் என்று சொன்னால் சரிதான். முககவசம் அணியாமல் வெளியே வரக்கூடாது என்ற கட்டாயம் இருந்து என்று சொன்னால் சரிதான். புகாரிலும், வாக்குமூலத்திலும், எதிரிகளின் அங்க அடையாளங்கள் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். புகார் 50 நாட்கள் கழித்து தான் எதிரிகள் கீழ்பாக்கம் காவல் நிலையத்தில் கைது செய்யப்பட்டார்கள் என்று சொன்னால் சரிதான். 10.08.2021 அன்று தான் எதிரிகள் கைது செய்யப்பட்டார்கள் என்று சொன்னால் சரிதான். 11.08.2021 அன்று என்னால் வழக்கு சொத்தான இருசக்கர வாகனம் பறிமுதல் செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். 24.08.2021 அன்று மேற்கண்ட வழக்கில் எதிரிகள் சம்பிரதாய கைது செய்யப்பட்டார்கள் என்று சொன்னால் சரிதான். 11.08.2021 அன்று காவல் நிலையத்திலிருந்து சாட்சிகளுடன் எப்படி விழுப்புர மாவட்டம் சென்றீர்கள், எத்தனை போலிசார் சென்றிர்கள் எப்படி கைப்பற்றிய வாகனத்தை நிலையம் கொண்டு வந்தீர்கள்

என்ற விவரங்களை கைப்பற்றுதல் சாட்சியங்களின் வாக்குமூலங்களில் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். வாகனம் காணாமல் போனதை மறைத்து ஒரு பொய்யான புகாரை பெற்று எதிரிகள் மீது இவ்வழக்கை பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வழக்கின் ஆவணங்கள் பின்னிட்டு வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. கீழ்பாக்கம் காவல் ஆய்வாளர் சொன்ன விதத்தில், சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் எதிரிகளை கைது செய்யவில்லை என்றாலும், எந்த சாட்சிகளின் முன்னிலையிலும், ஒப்புதல் வாக்குமூலம் பெற்ப்படவில்லை என்று சொன்னாலும், அதன் அடிப்படையில் நான் வழக்கு சொத்தை கைப்பற்றினேன் என்று சொல்வது உண்மையல்ல என்று சொன்னால் சரியல்ல.

Typed to my dictation in open Court.
Read over to the witness and admitted
by the witness as correct.

Judicial Magistrate,
Ambattur